முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.49/2010**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 24.04.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 24.04.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சிவக்குமார் | வயது.. | 55 |
| தந்தை பெயர்.. | நவநீதகிருஷ்ணன் | ஊர் .. | தீத்தாம்பாளையம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ...**

3. என்னுடைய மனைவிகடந்த 3 மாதங்களாக செயலாளராக பதவி வகிக்கிறார். எனது மனைவி 3 மாதங்களாக செயலாளராக பதவி வகிப்பதற்கு ஆதார ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன். யார் எனது மனைவியை செயலாளராக நியமித்தார் என்றால் மாவட்ட கல்வி அலுவலர் நியமித்தார். வழக்கில் மேற்சொன்னவாறு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல வாதி பள்ளியை முதிலில் எனது தாத்தா நடராஜர் தோற்றிவித்தார், கோவிந்தசாமி படையாட்சி நடராஜரோடு சேர்ந்து தோற்றிவித்தாரா என்றால் இல்லை. எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை நான் செயலாளராக இருந்தேன் என்றால் 1994 இல் இருந்து தற்போது 3 மாதத்திற்கு முன்பு வரை செயலாளராக பணியில் இருந்தேன் அதற்கு முன்பு எனது அண்ணி தமிழ்மணி செயலாளராக இருந்தார், அதற்கு முன்பு எனது அண்ணன் ஸ்ரீதரன் செயலாளராக பணிபுரிந்தார். நான் 12 அம் வகுப்பு படித்திருக்கிறேன் என்னால் தமிழ் ஆங்கிலம் இரண்டிலுமே நன்றாக படித்து புரிந்துக்கொள்ளமுடியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் 3ம் பக்கத்தில் தற்போது 4-5 ஆண்டுகளாக மேற்கூரை ஓடுகள் சரிந்தும் மண் சுவாரில் வெடிப்புகள் ஏற்பட்டு விழுந்து விட கூடிய நிலையில் மிகவும் கீழகமாக வசிக்க லாய்க்கி அற்ற நிலையில் உள்ளதால் அதை காலி செய்துவிட்டு தனியாக குடியிருந்து வருகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.10 வழக்கு சொந்தமான புகைப்படங்கள் காண்பிக்கப்பட்டு அதில் உள்ளத வீடு தான் வழக்கு சொத்து என்றால் சரிதான்., எனது தாத்தா கட்டிய வீடு ஆகும். வா.சா.ஆ.2 கிரக பிரவேச அழைப்பிதழில் தங்கள் நல்வரவை எதிர் நோக்கும் என்ற இடத்தில் எனது தந்தை நவநீதகிருஷ்ணன், கருணாகரன், ரவிசந்திரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . வா.சா.ஆ.1, முதலவது நிபந்தனையாக land shall be used entirely for purpose of contructing school, play ground other purposes என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன கிரகபிரவேச வீட்டை எனது தாத்தா எந்த வருடம் கட்டினார் என்றால் 2023 ஆகும். எனக்கு வழங்கப்பட்ட உத்தரவில் பள்ளி, playground மட்டும் தான் கட்டுவதற்கு அனுமதி உள்ளது என்றாலும், வீடு கட்ட அனுமதி இல்லை என்றாலும் சரியல்ல, other purpose இன் கீழ் பள்ளி நிர்வாகி வீடு கட்டி கொள்ளலாம், அவ்வாறு other purpose இன் கீழ வீடு கட்டுவதற்கு approval வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. தற்போது வாதியின் பள்ளி தொடக்க பள்ளியாக தான் இருக்கிறது.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.